People's Watch
No.6, Vallabai Road, Chokkikulam, Madurai - 625 002.
Phone: 0452-2531874 & 2539520 Fax: 0452- 2531874
E.mail: info@pwtn.org
Web: www.pwtn.org

12.3.2011

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள்
தமிழ்நாடு அரசு தலைமைச் செயலகம்
அண்ணாசாலை
சென்னை 60002

மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கு

மக்கள் கண்காணிப்பகத்தின் இனிய வணக்கம்.

மதுரையைத் தலைமையிடமாகக் கொண்டு மக்கள் கண்காணிப்பகம் அமைப்பு கடந்த 15 ஆண்டுகளாக, தமிழக அளவிலும், 2006 முதல் இந்தியா முழுவதிலுமுள்ள 18 மாநிலங்களிலும், மனித உரிமைக் காப்புப் பணியில் சர்வதேச மனித உரிமை அமைப்புகளுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது.

எவ்வித அரசியல் கட்சி சார்புமின்றியும், தனி நபர் மீதான விருப்பு, வெறுப்புக்களைக் கடந்தும் மனித உரிமை அரங்கில் அரசைக் கண்காணித்து மனித உரிமைக் கலாச்சாரத்தை வளர்த்தெடுக்கும் விதமாக மனித உரிமைகளைக் காத்தல், வளர்த்தல், வாழ்நெறியாக்கல் என்ற முறையில் எங்களது பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. தமிழகத்தில் கடந்த 05.3.2011 முதல் 11.3.2011 முடிய எங்கள் அமைப்பின் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகளை உங்கள் கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

### 05-3-2011 முதல் 11-3-2011 முடிய இவ்வாரத்தில் எங்கள் கவனத்திற்கு வந்த மனித உரிமை மீறல் செய்திகள்

| | | |
|---|---|---|
| 1. | என்கவுண்டர்/காவல் மரணம் | 1 |
| 2. | சிறைக் கைதி மரணம் / வன்முறை | – |
| 3. | பெண்கள் மீதான வன்முறை | 26 |
| 4. | காவல் நிலையச் சித்திரவதை | 5 |
| 5. | வகுப்பறை வன்முறை | 4 |
| 6. | தலித்துகள் மீதான வன்முறை | 4 |
| 7. | அரசு அதிகாரிகள் / காவல் துறையினர் லஞ்சம் பெற்றது. | 1 |
| 8. | மருத்துவர்கள் அலட்சியம் | – |
| 9. | கொத்தடிமை | – |
| 10. | பெண் சிசு கொலை | – |
| 11. | குழந்தை திருமணம் | – |
| 12. | குழந்தை தொழிலாளர் மீட்பு/ வன்முறை | 7 |

| | | |
|---|---|---|
| 13. | மீனவர்கள் மீது தாக்குதல் | 1 |
| 14. | கந்து வட்டிக் கொடுமை | 2 |
| 15. | கட்டப்பஞ்சாயத்து / சமூகப் புறக்கணிப்பு | – |
| 16. | ரேசன் அரிசி கடத்தல் | 1 |
| 17. | மணல் கொள்ளை | – |
| 18. | திருநங்கைகள் மீதான வன்முறை | – |
| 19. | பழங்குடியினர் மீதான வன்முறை | – |
| 20. | முதியவர்கள் மீதான வன்முறை | – |
| 21. | மாற்றுத்திறனாளர்கள் மீதான வன்முறை | – |
| 22. | பொதுவானவை | 2 |
| | மொத்தம் | 56 |

மேற்கண்ட சம்பவங்களில் தாங்கள் உடனடியாகத் தலையிட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அன்புடன் வேண்டுகிறோம்.

இதுபோன்ற காவல் மரணங்களும், சித்திரவதைகளும் தொடர்ந்து நிகழா வண்ணம் தடுக்க ஆவன செய்ய வேண்டுகிறோம்.

நன்றி,

நம்பிக்கையுடன் மனித உரிமைப் பணியில்

(ஹென்றி டிபேன்)
நிர்வாக இயக்குநர்

நகல்கள்:

தமிழகத் துணை முதல்வர்

தமிழகத் தலைமை நிலையச் செயலாளர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்ட ஆட்சியாளர்கள்

தமிழகக் காவல்துறைத் தலைவர் மற்றும் உயரதிகாரிகள்

அனைத்து மாவட்டக் காவல்துறைக் கண்காணிப்பாளர்கள்

அனைத்து மனித உரிமை ஆணையங்கள்

அனைத்து அரசியல் கட்சிகள்

# தமிழகத்தில் மனித உரிமை மீறல்கள் – தொகுப்பு-10
# 05.3.2011 முதல் 11.3.2011 முடிய

| வ. எண் | செய்தி கிடைத்த நாள் | மாவட்டம் / பெயர் விபரம் மற்றும் சம்பவ விபரம் | பிரிவு | தகவல் பெற்றது. |
|---|---|---|---|---|
| 726. | 05.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னை கீழ்ப்பபாக்கத்தில் உள்ள தனியார் பள்ளி விடுதியில் தங்கி ஆறாம் வகுப்பு படிக்கும் சென்னை, விழுப்புரம் மற்றும் ஆந்திராவைச் சேர்ந்த 3 மாணவிகள். திருவல்லிக்கேணியைச் சேர்ந்த கார்த்திக்(20) சீனிவாசன்(23) மாணவிகளை டூர் அழைத்துச் செல்வதாக ஏமாற்றி அழைத்துச் சென்றதாக மாணவர்கள் இருவர் கைது. | குழந்தைகள் மீதான வன்முறை & கடத்தல் | தினமலர் |
| 727. | 05.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி ஆதிதிராவிட விடுதி மாணவர்களுக்கு குறித்த நேரத்தில் உணவு தருவது கிடையாது. காலம் கழித்துவந்தாலும் உணவு தரமானதாக இல்லை. உணவு பற்றாக்குறையாக உள்ளது. குறித்த நேரத்தில் உணவுகிடைக்காததால் கல்லூரிக்கு உணவு அருந்தாமலே செல்லவேண்டிய சூழ்நிலை ஏற்படுவதாக ஆதிதிராவிட மாணவர் விடுதியில் உண்ணா விரதம். | வகுப்பறை வன்முறை | தீக்கதிர் |
| 728. | 06.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை புதூரைச் சேர்ந்த சரவணன் மனைவி மகள் நிவேதா(14). திலகர்திடல் பகுதியில் எட்டாம் வகுப்பு படித்து வந்த நிவேதாவை சிக்கந்தர்சாவடியைச் சேர்ந்த பிரேமானந்தா, பாப்பாத்தி மகன் தீபன்ராஜுக்கு பெண் கேட்டனர். சரவணன் தர மறுத்ததால் நிவேதா கடத்தல். | குழந்தைகள் மீதான வன்முறை | தினகரன் |
| 729. | 06.3.2011 | **காஞ்சிபுரம் மாவட்டம்:** காஞ்சீபுரம் லிங்கப்பர்தெருவில் வசிப்பவர் சங்கரநாராணன் மகன் தேவராஜன்(28) தீப்பாஞ்சம்மன்கோவிலில் அர்ச்சகராக பணியாற்றி வருகிறார். சன்னதியில் விளையாடிய 3 வயது குழந்தைக்கு முத்தம் கொடுத்து சில்மிஷம். | குழந்தைகள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | அர்ச்சகர் மீது புகார். | | |
| 730. | 06.3.2011 | **புதுச்சேரி மாநிலம்:** உருளையன் பேட்டை போலீஸ் சப்–இன்ஸ்பெக்டர் செந்தில்குமார், கடந்த மாதம் 20 தேதி ஒரு வழக்கு தொடர்பாக (டி.என்.22 பிஎப்–5590) காரை பறிமுதல் செய்தார். காவல் நிலையத்தின் பின்புறம் நிறுத்தியிருந்த காரிலிருந்த ஸ்டெப்னி, ஸ்பீக்கர், டேப் ரெக்கார்டர் ஆகியவை காணாமல் போனது. இதைத் திருடியவர்கள் காவல் நிலையத்தில் பணியாற்றிய 12 காவலர்கள். | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 731. | 06.3.2011 | **திண்டுக்கல் மாவட்டம்:** திண்டுக்கல் பெரியார்காலனி மகாலட்சுமி நகரில் வசிப்பவர் ராஜா(28) மனைவி ராஜாத்தி(25). இதே பகுதியைச் சேர்ந்த மணி(28)க்கும் ராஜாத்திக்கும் கள்ளத்தொடர்பு. ஆத்திரமடைந்த ராஜா தனது மனைவியை கத்தியால் கழுத்தை அறுத்துக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினமலர் |
| 732. | 06.3.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி கிருஷ்ணசாமி கோவில் தெருவைச் சேர்ந்த ஸ்ரீதர்(50) மனைவி இந்துமதி(43). அதே பகுதியில் உள்ள ஒரு பெண்ணிடம் இந்துமதி ரூ. 20 ஆயிரம் கடன் வாங்கினார். வாங்கிய கடனுக்கான பணத்தை செலுத்தியும் பணம் செலுத்தவில்லை என அந்த பெண் மர்ம நபர்களுடன் வீட்டில் வந்து மிரட்டியதாக இந்துமதி காவல் நிலையத்தில் புகார். காவல் நிலையத்தில் நடவடிக்கை எடுக்காததால் மனமுடைந்த கணவன் மனைவி இருவரும் விஷம் குடித்துத் தற்கொலை. | கந்துவட்டிக் கொடுமை & தற்கொலை | தீக்கதிர் |
| 733. | 06.3.2011 | **சென்னை மாவட்டம்:** அயனாவரம், கோபால்பிள்ளை நகரைச் சேர்ந்த ரமேஷ்குமார்(32) மனைவி யோகாம்பிகை(29). தனியார் மருத்துவமனையில் செவிலியராக வேலை பார்த்து வந்தார். நிரந்தர வேலை கிடைக்கவில்லை என மனமுடைந்த யோகாம்பிகை தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & தற்கொலை | தீக்கதிர் |
| 734. | 07.3.2011 | **நெல்லை மாவட்டம்:** நெல்லை | பெண்கள் மீதான | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | ஆலங்குளம் அருகே உள்ள நல்லூர் பிள்ளையார்கோவில் தெருவைச் சேர்ந்த கந்தசாமி மகள் சித்ரா(19). பக்கத்து வீட்டில் வசிப்பவர் கனகராஜ்(23) திருமணம் செய்து கொள்வதாகக் கூறி சித்ரா 3 மாத கர்ப்பம். | வன்முறை | |
| 735. | 07.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** கச்சத்தீவு அருகே மீன்பிடித்த ராமேஸ்வரம் மீனவர்களை இலங்கை கடற்படையினர் தடுத்து, விரட்டியடிப்பு. பாதிக்கப்பட்ட மீனவர்கள் புகார். | மீனவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 736. | 07.3.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் தாலுகாவில் உள்ள மேலவளவு கிராமத்தில் காந்திநகரில் 400 தலித் மக்கள் வசிக்கின்றனர். இவர்களது குடும்பங்களில் இறப்பு நிகழ்ந்து விட்டால், இறந்தவர் உடலை தூக்கிச் செல்ல வழியில்லாமல், தனியாருக்கு சொந்தமான வயல்களில் நடந்து செல்கின்றனர். அறுவடை காலங்களில் இறப்பு நிகழ்ந்துவிட்டால் தனியாருக்கு சொந்தமான வயல்களில் செல்லும்போது, பிரச்சனைகள் நிகழ்வதாகவும் தலித் மக்கள் தமிழக அரசுக்கு தெரியபடுத்தியும் நடடிக்கை எடுக்கவில்லை என தலித் மக்கள் புகார். | தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 737. | 07.3.2011 | **சேலம் மாவட்டம்:** சேலம் அஸ்தம்பட்டி அடைக்கலநகர் அருகில் உள்ள சாமுண்டீஸ்வரி கோவில் தெருவில் 30 வயது மதிக்கத்தக்க பெண் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 738. | 07.3.2011 | **கோவை மாவட்டம்:** கோவை ஒண்டிப்புதூரை சேர்ந்த திருமணமான பெண் ஒருவருக்கு அதே பகுதியைச் சேர்ந்த குமரேஷ்ம் உல்லாசமாக இருந்த படத்தை இன்டர்நெட்டில் வெளியிட்டதற்காக குமரேஷ் கைது. | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினத்தந்தி |
| 739. | 07.3.2011 | **சென்னை மாவட்டம்:** சென்னையைச் சேர்ந்த டாக்டர் ரவிச்சந்திரன்(42) மனைவி உமாமகேசுவரி(40). உமா தனது குழந்தைகளுடன் ஏற்காட்டில் பள்ளி வளாகத்தில் உள்ள குடியிருப்பில் தங்கியிருந்தார். உமாமகேசுவரி தீக்குளித்துத் தற்கொலை. காவலர்கள் | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | விசாரணை. | | |
| 740. | 08.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** நெல்லை தென்காசியைச் சேர்ந்த எம்.இப்ராகிம் மீரான் நண்பர் தன்னூர் அண்ணாநகரைச் சேர்ந்த பி.பக்ருதீன் (எ) பாபு. இருவரும் மதுரை மண்டல பாஸ்போர்ட் அலுவலகத்தில் பாஸ்போர்ட் கேட்டு விண்ணப்பித்தார். வீட்டு முகவரி, அடையாள அட்டை, ஜாதி சான்று, ரேஷன்கார்டு, போலியாக தயாரித்து, விண்ணபத்துடன் இணைத்திருந்தார். இம்மோசடிக்கு பாஸ்போர்ட் அலுவலர் எச்.கீதாபாய், உதவியாளர் பி.துரைராஜ், அலுவலக உதவியாளர் அன்பழகன், திண்டுக்கல் போலீஸ் எஸ்.பி., அலுவலகத்தின் பாஸ்போர்ட் பிரிவு இளநிலை உதவியாளர் எஸ்.சுரேஷ்பாபு உடந்தையாக இருந்ததாக இவர்கள் மீது சி.பி.ஐ., யினர் வழக்குப்பதிவு. சுரேஷ்பாபு தவிர மற்றவர்கள் கைது. | காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 741. | 08.3.2011 | **திருச்சி மாவட்டம்:** மணப்பாறை கோவில்பட்டி சாலையில் வசித்து வருபவர் கிருத்திகா(29). இவர் மணப்பாறை அருகே உள்ள முத்துபுடையான்பட்டி அரசு நடுநிலைப் பள்ளியில் ஆசிரியையாக வேலை பார்த்தார். ஸ்கூட்டரில் வேலைக்குச் சென்ற கிருத்திகாவை கடத்திச் சென்றதாக பொதுமக்கள் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினத்தந்தி |
| 742. | 08.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை அருகே உள்ள சிட்டம்பட்டியைச் சேர்ந்த விவசாயி முருகேசன் மகள் சத்தியபிரியா(13). திருமங்கலம், செக்கானூரணி ரோட்டில் கரடிக்கல் அருகே உள்ள பாலர் இல்லத்தில் தங்கி 9ம் வகுப்பு படித்து வந்தார். படித்துக் கொண்டிருந்த மாணவி திடீரென வாந்தி எடுத்து மயங்கி விழுந்தார். மருத்துவமனை கொண்டு செல்லும் வழியில் மாணவி மரணம். காவலர்கள் விசாரணை. | வகுப்பறை வன்முறை | தினத்தந்தி |
| 743. | 08.3.2011 | **தேனி மாவட்டம்:** போடி சார்பதிவாளர் அலுவலகத்தில் லஞ்ச ஒழிப்பு காவலர்கள் அதிரடி சோதனை. கணக்கில் வராத ரூ. 17 அயிரத்து 958 | லஞ்சம் | தினகரன் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பறிமுதல். இது குறித்து சார்பு பதிவாளர் மற்றும் அலுவலகர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என அதிகாரிகள் கூறினார். | | |
| 744. | 08.3.2011 | **மதுரை மாவட்டம்:** திருமங்கலம் அண்ணாநகரில் அரசு பிற்படுத்தப்பட்டோர் மாணவர் விடுதி உள்ளது இங்கு 27 மாணவர்கள் தங்கி படித்து வருகின்றனர். விடுதியில் தங்கியுள்ள மாணவர்கள் தமிழ்செல்வன்(14), அழகுபாண்டி(17), சரவணன்(13) ராஜதுரை(16) ஆகிய 4 மாணவர்கள் மயக்கம். அதே பள்ளியில் படிக்கும் மாணவர் ஒருவர் கொடுத்த போதை மாத்திரை சாப்பிட்டதால் மாணவர்கள் மயக்கம். மாணவர்கள் திருமங்கலம் அரசு மருத்துவமனையில் சிகிச்சை. | மாணவர்கள் மீதான வன்முறை | தினகரன் |
| 745. | 08.3.2011 | **விருதுநகர் மாவட்டம்:** தலித் மக்கள் மீது பொய் வழக்கு போடும் திருச்சுழி டிஎஸ்.பி. ஞானசேகரன் மீது நடவடிக்கை எடுக்கக்கோரி தீண்டாமை ஒழிப்பு முன்னணி சார்பில் விருதுநகர் மாவட்டம் முழுவதும் டிஜி.பிக்கு தந்தி அனுப்பப்பட்டது. | காவல் நிலையச் சித்திரவதை & தலித்துகள் மீதான வன்முறை | தீக்கதிர் |
| 746. | 08.3.2011 | **சேலம் மாவட்டம்:** கோபி அருகேயுள்ள மொடச்சூர் மில் ரோட்டைச் சேர்ந்த ஜெயகாந் மனைவி பிரித்தா(28) எம்.பி. பி.எஸ் படித்து இவர் சென்னையில் உள்ள ஒரு மருத்துவமனையில் மருத்துவராக உள்ளார். கணவன் மனைவி இருவரும் குடும்பத் தகராறு காரணமாக பிரிந்து வாழ்ந்தனர். இன்னிலையில் குடும்பம் நடத்த வர பிரித்தா மறுப்பு. ஆத்திரமடைந்த ஜெயகாந்த பிரித்தாவை தாக்கியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை | வித்யாசாகர் |
| 747. | 09.3.2011 | **கடலூர் மாவட்டம்:** கடலூர் சிப்காட் வளாகத்தில் 20க்கும் மேற்பட்ட ரசாயன தொழிற்சாலைகள் உள்ளன. குடிகாடு கிராமத்தின் அருகே சாசன்கெமிக்கல் தொழிற்சாலையில் ஏற்பட்ட வாயு கசிவால் 150 பேர் மயக்கம். மருத்துவமனையில் சிகிச்சை. | தொழிற்சாலையில் வாயு கசிவு | தீக்கதிர் |
| 748. | 09.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** தேவகோட்டை அரகே உள்ள நகாடி | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | கிராமத்தைச் சேர்ந்த பாண்டித்துரை மனைவி மங்கையர்கரசி(30). மாமியார் காளியம்மாள் பெயரில் இருந்த இடத்தில் கலைஞர் வீட்டு வசதி திட்டத்தின் கீழ் மங்கயைர்கரசியின் தந்தை சிவலிங்கம் மகளுக்காக வீடு கட்டி கொடுத்தார். மாமியார் மருமகள் இருவருக்கும் ஏற்பட்ட தகராறில் ஆத்திரமடைந்த மாமியார் காளியம்மாள் மற்றும் நாத்தனாார் வேலவி இருவரும் மங்கையர்கரசி மீது மண்ணெண்ணெய் ஊற்றி தீ வைத்ததற்காக இருவரும் கைது. | | |
| 749. | 09.3.2011 | **ஈரோடு மாவட்டம்:** வீரப்பன்சத்திரம் எஸ்.ஜி.வலசு பகுதியைச் சேர்ந்த மணிவண்ணன் மகள் சாந்தினி(19). இவர் கவுந்தப்பாடியில் உள்ள தனியார் பாலிடெக்னிக் கல்லூரியில் 2–ம் ஆண்டு படித்து வந்தார். ஆசிரியர் பால்அரசு கையால் அடித்துச் சித்திரவதை செய்ததில் மனமுடைந்த மாணவி தூக்கிட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை | தினத்தந்தி |
| 750. | 09.3.2011 | **மதுரை மாவட்டம்:** மேலூர் அருகே உள்ள அ.வல்லாளபட்டியைச் சேர்ந்த ஆண்டப்பன் மனைவி சாரதாம்மாள்(75) மகள் அஷ்டலட்சுமி(41) மனநிலை பாதிக்கப்பட்ட அஷ்டலட்சுமி தனது தாய் சாரதாம்மாளை கம்பால் அடித்துக் கொலை செய்ததாக அஷ்டலட்சுமி கைது. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 751. | 9.3.2011 | **நாமக்கல் மாவட்டம்:** பரமத்தி வேலூர் தெடும்பாள் கோவிந்தபாளையம் அருகே தலித் சமுகத்தைச் சேர்ந்த +12 மாணவி பார்வதி. ஆதிக்கச் சாதியியைச் சார்ந்த 4 பேர் மாணவியை பாலியல் பலாத்காரம். பாதிக்கப்பட்ட மாணவி மருத்துவமனையில் சிகிச்சை. | தலித்துகள் மீதான வன்முறை & குழந்தைகள் மீதான வன்முறை | வித்யாசாகர் |
| 752. | 10.3.2011 | **கடலூர் மாவட்டம்:** வடலூரைச் சேர்ந்த சுரேஷ் வடலூரா் காவல் நிலையக் காவலர்கள் சுரேஷ்–ஐ சென்னையில் 1.03.2011 கைது செய்தனர். 4.03.2011 வரை கடலூர் காவல் நிலையத்தில் அடித்துச் சித்திவதை. 4.03.11 நள்ளிரவில் கடும் | காவல் நிலைய மரணம் | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | காயங்களுடன் கடலூரார் சிறையில் அடைக்க முயற்சி. சிறைக்காவலர்கள் மறுப்புத் தெரிவித்ததால் கடலூர் மருத்துவமனையில் சிகிச்சைக்கு அனுமதி. சுரேஷ் 5.03.2011 ல் மரணம். | | |
| 753. | 10.3.2011 | **திருச்சி மாவட்டம்:** திருச்சி தொட்டியம் காட்டுப்புத்தூர் அருகே M. களத்தூரைச் சேர்ந்த நேரு மனைவி அமலா(25). கணவன் மனைவி குடும்ப பிரச்சனையில் ஆத்திமடைந்த நேரு மனைவியின் வாயில் வலுக்கட்டாயமாக விஷம் ஊற்றியதாக புகார். | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | CHRM சக்கரவர்த்தி |
| 754. | 10.3.2011 | **திருச்சி மாவட்டம்:** சிறுகமணி பெட்டவாய்த்தலை அருகே அங்கன்வாடியில் 30 குழந்தைகள் படிக்கின்றனர். அங்கன்வாடி அருகே உள்ள புளியமரத்தின்கிளை ஒடிந்து விழுந்ததில் குழந்தைகள் குமார் (3), யாழினி(3), காயம், குழந்தைகள் இருவரும் மருத்துவமனையில் அனுமதி. | வகுப்பறை வன்முறை | பிரபாகர் |
| 755. | 10.3.2011 | **மதுரை மாவட்டம்:** ஆதரவற்ற குழந்தைகள் மையத்தின் வார்டன் கிங்ஸ்லி கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு அங்கு தங்கி படிக்கும் மாணவி கவிதாவை ஆபாச படம் எடுப்பதாக கடந்த 8.3.2011 அன்று வழக்கறிஞர் செல்வக்குமார் கொடுத்த புகாரின் அடிப்படையில் நாகமலைப்புதுக்கோட்டை காவலர்கள் கிங்சிலியை கைது செய்தனர். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | சதீஸ் ராஜ்குமார் |
| 756. | 10.3.2011 | **கரூர் மாவட்டம்:** மண்மங்கலம் அண்ணாநகர் சந்திரன் மனைவி வள்ளி, ரோட்டில் சென்று கொண்டிருந்த வள்ளியை ஆதிக்கச் சாதியைச் சார்ந்த ஜெகதீஸ் பாலியல் பலாத்காரம் செய்ய முயற்சி. வள்ளி புகார். | பெண்கள் மீதான வன்முறை & தலித்துகள் மீதான வன்முறை | CHRM. பொன்னுச்சாமி |

| | | | | |
|---|---|---|---|---|
| 757. | 10.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஆற்காடு தாலுகா, புலயிங்கண்ணு பகுதியைச் சேர்ந்த சங்கர் மனைவி கன்னியம்மாள். அதே பகுதியில் உள்ள ஆதிக்க சமூகத்தைச் சேர்ந்த ஜெயபால் செங்கல்சூளையில் வேலை பார்க்கும் பெண்ணிடம் தகாத முறையில் நடந்த கொண்டார். தட்டிக்கேட்ட சங்கரை அடித்தச் சித்திரவதை. | பெண்கள் மீதான வன்முறை & தலித்துகள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 758. | 10.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** திருப்பூர் வித்யா மந்திர் மெட்ரிக்குலேஷன் பள்ளியில் கூடுதல் கட்டணம் வசூலிப்பதுடன், பெற்றோரை மிரட்டும் பள்ளி நிர்வாகத்தைக் கண்டித்து சாலை மறியல். | வகுப்பறை வன்முறை & கூடுதல் கட்டணக் கொள்ளை | தீக்கதிர் |
| 759. | 10.3.2011 | **சிவகங்கை மாவட்டம்:** காரைக்குடி பாலையூரைச் சேர்ந்த சுமதி(18). கொத்தமங்கலத்தைச் சேர்ந்த அண்ணாமலை(21). அண்ணாமலையும் சுமதியும் காதலித்தனர். திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றி இருவரும் உல்லாசமாக இருந்ததை மொபைல்போன் கோமிராவில் அண்ணாமலை பதிவு செய்ததோடு இன்டர்நெட்டில் வெளியிட்டதாக சுமதி புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | தினமலர் |
| 760. | 10.3.2011 | **இராமநாதபுரம் மாவட்டம்:** ராமநாதபுரம் தெற்கு முனியசாமி கோயில் தெருவைச் சேர்ந்த காவலர் செல்வம் மனைவி ஜெயபாரதி (36). கணவன் மனைவியிடையே விவகாரத்து வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது. ராமநாதபுர காவல்நிலையக் காவலர்கள் செல்வம் மீதான புகாரை வாபஸ் வாங்கக்கோரி பேரம் பேசியதாக இன்ஸ்பெக்டர் குணசுந்தரம் மீது ஜெயபாரதி புகார். | பெண்கள் மீதான வன்முறை & காவல் நிலையச் சித்திரவதை | தினமலர் |
| 761. | 10.3.2011 | **புதுக்கோட்டை மாவட்டம்:** புதுக்கோட்டை டவுன் சத்தியமூர்த்தி நகர் பகுதியைச் சேர்ந்த கலைகுமார்(55) மகள் அபர்ணா. வீட்டில் தனியாக இருந்த அபர்ணாவை பாலியல் பலாத்காரம் செய்ததோடு கொலை . | பெண்கள் மீதான பாலியல் வன்முறை & கொலை | தினமலர் |
| 762. | 10.3.2011 | **மதுரை மாவட்டம்:** | ரேசன் அரிசி | தினத்தந்தி |

| | | | | |
|---|---|---|---|---|
| | | உசிலம்பட்டியில் வசிக்கும் பழனி என்பவரது மனைவி ஜெயா(55). அவரது வீட்டில் பதுக்கி வைத்திருந்த 500 கிலோ ரேஷன் அரிசியும், 150 லிட்டர் மண்ணெண்ணையும் அதிகாரிகள் சோதனை செய் போது பறிமுதல். | பறிமுதல் | |
| 763. | 10.3.2011 | **மதுரை மாவட்டம்:** மதுரை மேலூரைச் சேர்ந்த கோவிந்தசாமி மனைவி ஆசிரியை பிரேமாவதி(43). பெரம்பலூர் ஆலம்பாடி சாலையில் வசித்து வரும் ரங்கசாமி மகன் பாஸ்கர்(29). பிரேமாவதியின் மூத்த மகள் ரேகாவை காதலித்தார். பிரேமாவதி பெண் தர மறுப்பு. ஆத்திரமடைந்த பாஸ்கர் பிரேமாவதியை அரிவாளால் வெட்டிக் கொலை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை | தினத்தந்தி |
| 764. | 11.3.2011 | **மதுரை மாவட்டம்:** செக்கானூரணியைச் சேர்ந்த பாண்டி(42) மனைவி ஜெயந்தி(37). மனைவியின் நடத்தையில் சந்தேகமடைந்த பாண்டி இருவருக்கும் நடந்த குடும்பத் தகராறில் ஆத்திரமடைந்த பாண்டி ஜெயந்தியை அரிவாளால் வெட்டியதில் காயமடைந்த ஜெயந்தி மருத்துவமனையில் சிகிச்சை. | பெண்கள் மீதான வன்முறை & கொலை முயற்சி | தினகரன் |
| 765. | 11.3.2011 | **மதுரை மாவட்டம்:** கொட்டாம்பட்டி அருகே உள்ள கள்ளம்பட்டியைச் சேர்ந்த ராஜாங்கம் மகள் ரதி(22). நெல்லுக்குண்டுப்பட்டியைச் சேர்ந்த பூவேந்திரன்(26) கடத்திச் சென்றதாக ரதியின் பெற்றோர் புகார். | பெண்கள் மீதான வன்முறை & கடத்தல் | தினகரன் |
| 766. | 11.3.2011 | **மதுரை மாவட்டம்:** தெப்பக்குளம் பகுதியில் உள்ள ஒரு பள்ளியில் 9–ம் வகுப்பு படிக்கும் மாணவர் பாலசுந்தரராமனை காணவில்லை என பெற்றோர் புகார். விசாரணையில் பாலசுந்தரராமன் உட்பட உடன் படிக்கும் 3 மாணவர்களையும் காணவில்லை என 4 மாணவர்களின் பெற்றோர் புகார். | மாணவர்கள் மாயம் | தினத்தந்தி |
| 767. | 11.3.2011 | **மதுரை மாவட்டம்:** திருப்பாலையைச் சேர்ந்த ஆறுமுகம்(60). இவர் அந்த பகுதியில் வசித்து வரும் சிறுமியை அழைத்து இளநீர் வாங்கி வரும்படி கூறினார். | குழந்தைகள் மீதான பாலியல் வன்முறை | தமிழ்சுடர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | இளநீர் வாங்கி வந்து கொடுத்த சிறுமியிடம் ஆறுமுகம் சில்மிஷம் செய்ததாக புகார். | | |
| 768. | 11.3.2011 | **திருப்பூர் மாவட்டம்:** கேளம்பாக்கத்தில் ஒரு மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் கூடுதல் கல்விக் கட்டணம் செலுத்தாத மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி மறுப்பு. | வகுப்பறை வன்முறை & கூடுதல் கல்விக் கட்டணம் | பாஸ்கர் |
| 769. | 11.3.2011 | **சென்னை மாவட்டம்:** பெரம்பூர் ரயில்வே பாதுகாப்பு படையில் ஏட்டாக பணிபுரிபவர் சுப்பையா. அங்கு எஸ்.ஐ.யாக பணிபுரிந்து வரும் தியாகராஜனுக்கு பணி ஒதுக்கீடு தொடர்பாக தகராறு. ஆத்திரமடைந்டத எஸ்.ஐ. சுப்பையாவை தாக்கியதாக எஸ்.ஐ. மீது ஏட்டு புகார். | காவல் நிலையச் சித்திரவதை | பாஸ்கர் |
| 770. | 11.3.2011 | **சென்னை மாவட்டம்:** ஆவடி பள்ளசேக்காடு பஜனை கோயில் தெருவைச் சேர்ந்த துரைராஜ் மனைவி புவனேஸ்வரி(21). கணவன் மனைவி குடும்பத் தகராறில் மனமுடைந்த புவனேஸ்வரி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 771. | 11.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** அத்தியந்தல் பகுதியில் ஆசிரமம் நடத்துபவர் ராதாம்மாள்(48). ஆசிரமத்தில் ஏற்கனவே தங்கியிருந்த ஜெர்மனி நாட்டைச் சேர்ந்த கலிடாஸ், சூன்யா, இஸ்ரேல் நாட்டைச் சேர்ந்த ரெய்ச்சல் ஆசிரமம் பற்றி தவறான தகவல்களை பரப்பி வருவதோடு திருவண்ணாமலையைச் சேர்ந்த விஜயகார்த்தியை அடியாளாக பயன்படுத்தி தன்னை மிரட்டி வருவதால் மனமுடைந்த ராதாம்மாள் தீக்குளித்து மரணம். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 772. | 11.3.2011 | **வேலூர் மாவட்டம்:** ஜோலபார்பேடடை அருகே உள்ள பாய்ச்சல் கிராமம் ஜெய்பீம் நகரைச் சேர்ந்த முருகன்(35) மனைவி மாலா(30). மனைவியின் நடத்தையில் சந்தேகப்பட்ட முருகன் கத்தியால் மனைவியை வெட்டியதாக சிகிச்சை | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | பெற்றுவரும் மாலா புகார். | | |
| 773. | 11.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** பேரணாம்பட்டு டவுன் காமராஜர் நகர் முதல் தெருவைச் சேர்ந்த கார்த்தி(28) மனைவி சாந்தி (24) குழந்தைகள் தர்ஷினி(3) ரீனா(2). குழந்தைகளுடன் சாந்தியை காணவில்லை என கார்த்தி புகார். | பெண்கள் மீதான வன்முறை | பாஸ்கர் |
| 774. | 11.3.2011 | **சென்னை மாவட்டம்:** கோடம்பாக்கத்தைச் சேர்ந்த சசிகுமார் (24) அதே பகுதியைச் சேர்ந்த திவ்யா(21) இருவரும் காதலித்தனர். திருமணம் செய்து கொள்வதாக ஏமாற்றியதில் திவ்யா கர்ப்பம். திருமணம் செய்ய சசிகுமார் மறுப்பு. திவ்யா புகார். | பெண்கள் மீதான பாலியல் வன்முறை | பாஸ்கர் |
| 775. | 11.3.2011 | **வேலூர் மாவட்டம்:** பள்ளிகொண்டா அடுத்த ஒதியத்தூர் கிராமத்தைச் சேர்ந்த அன்பு(28) மனைவி வெள்ளிராணி(20). திருமணம் நடந்த 3 மாதங்களே ஆன நிலையில் கணவனின் குடிப்பழகத்தால் மனமுடைந்த வெள்ளிராணி கிணற்றில் குதித்து மரணம். | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 776. | 11.3.2011 | **திருவண்ணாமலை மாவட்டம்:** கலசப்பாக்கம் அடுத்த பிரையாம்பட் கிராமத்தைச் சேர்ந்த போகி(32) மனைவி தரணி(22). திருமணமாகி இரண்டு ஆண்டுகள் ஆன நிலையில் தரணி தூக்குப்போட்டுத் தற்கொலை. | பெண்கள் மீதான வன்முறை & தற்கொலை | பாஸ்கர் |
| 777. | 11.3.2011 | **சென்னை மாவட்டம்:** வியாசர்பாடி கிருஷ்ணமூர்த்தி நகரைச் சேர்ந்த ஸ்ரீதர்(50) மனைவி இந்துமதி(48). அதே பகுதியைச் சேர்ந்த ஒருரிடம் ஸ்ரீதர் ரூ. 20.000 ஆயிரம் கடன் வாங்கினார். ரூ. 80,000 ஆயிரம் திருப்பி செலுத்தியும் கந்துவட்டிக்காரர் மிரட்டியதால் மனமுடைந்த தம்பதியினர் தற்கொலைக்கு முயற்சி. | கந்துவட்டிக் கொடுமை | பாஸ்கர் |